<u>சுருக்கம்</u>

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – பத்து ஆண்டுகளுக்கு முன்பு மின்கலனால் இயங்கும் ஸ்கூட்டர்/இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் பெற்ற மாற்றுத்திறனாளிகளின் வாகனங்கள் பழுதடைந்திருப்பின் – அத்தகைய பயனாளிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கையில், 25 சதவீத ஒதுக்கீட்டுக்குள் பழுதடைந்த வாகனங்களுக்குப் பதிலாக, புதிய இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.08 நாள்: 01.08.2024,

குரோதி, ஆடி–16,

திருவள்ளுவர் ஆண்டு, 2055.

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.38, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 18.02.2010.
2. அரசாணை (நிலை) எண்.72, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 06.09.2010.
3. அரசாணை (நிலை) எண்.30, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 14.03.2012.
4. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த்துறை, நாள் 04.05.2018.
5. அரசாணை (நிலை) எண்.17, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த்துறை, நாள் 04.07.2023.
6. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண்.2427/உ.உ.பிரிவு/2024, நாள்.25.06.2024.

******

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 18 வயதிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் கடும் ஊனமுற்ற மாணவ / மாணவியர் / சுயதொழில்புரிவோர், பணிக்கு செல்லும் கடும் ஊனமுற்ற 250 நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிக்கு பதில் பேட்டரி பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வழங்கவும் கடும் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்கு இலவசமாக வழங்கப்படுவது போன்று பணிக்குச் செல்லும், சுயதொழில் புரிபவர்களுக்கும் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் வாங்க மான்யத்திற்கு பதிலாக இலவசமாக வழங்கவும் 2009–2010–ம் ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ.50,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011–ஆம் நிதியாண்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்கள்

வழங்க கோரி விண்ணப்பித்த மாற்றுத்திறன் படைத்த கல்வி பயிலும் 385 மாணவ, மாணவியர்களுக்கும், முன்னுரிமை அடிப்படையில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்கள் வழங்க 1,00,10,000/- ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டம் 2011-2012-ஆம் நிதியாண்டு முதல் துவக்கப்பட்டு, ரூ.2.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2018-2019 ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் சுமார் 52 நலத்திட்டங்களை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப்பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் பத்தி 2 (i) (3)-ல் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இருகால்கள் பாதிக்கப்பட்டு கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி ஒரு கால் பாதிக்கப்பட்டு, கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் இணைப்புச் .சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்திற்காக - கூடுதலாக நிதி ரூ.450.00 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

6. இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2024-2025-ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது 21.06.2024 அன்று இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

> "பத்து ஆண்டுகளுக்கு முன்பு மின்கலனால் இயங்கும் ஸ்கூட்டர்கள் மற்றும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பெற்ற மாற்றுத்திறனாளிகளின் வாகனங்கள் பழுதடைந்து, அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கையில், 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த வாகனங்களுக்குப் பதிலாக, புதிய இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும்".

7. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், அவர்களின் கடிதத்தில், ஒவ்வொரு ஆண்டும், கால்கள் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் சுயமான நடமாட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் இணைப்புச்

சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேற்குறிப்பிடப்பட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக, பத்து ஆண்டுகளுக்கு முன்பு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் பெறப்பட்டு, அவ்வாகனங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், பழுதடைந்த ஸ்கூட்டர்களுக்குப் பதிலாக புதிய வாகனம் வழங்கும் வகையில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கையில், 25 சதவீதம் கூடுதலாக வழங்க அரசாணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

8. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு, பத்து ஆண்டுகளுக்கு முன்பு மின்கலனால் இயங்கும் ஸ்கூட்டர்/இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் பெற்ற மாற்றுத்திறனாளிகளின் வாகனங்கள் பழுதடைந்திருப்பின் அத்தகைய பயனாளிகள் புதிய வாகனம் கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் மொத்த எண்ணிக்கையில், 25 சதவீத அளவிலான ஒதுக்கீட்டுக்குள் பழுதடைந்த வாகனங்களுக்குப் பதிலாக, புதிய இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள்ளாக வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிஜி தாமஸ் வைத்யன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (ச.ந/வ.செ.பொது–I&II/வ.வ–I)த் துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**
05.01.2024